ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_{3}$மாந்தமஹாதே$_{3}$ஶிகாய நம:

# பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமோழி

# 3.1 – தன்னேராயிரம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_{3}$ராமாநுஜ மஹாதே$_{3}$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 3.1 – தன்னேராயிரம்

‡ தன் நேர் ஆயிரம் பிள்ளைகளோடு ⋆
தளர்நடையிட்டு வருவான் ⋆
பொன் ஏய் நெய்யொடு பால் அமுதுண்டு ⋆
ஒரு புள்ளுவன் பொய்யே தவழும் ⋆
மின் நேர் நுண்ணிடை வஞ்சமகள் கொங்கை துஞ்ச ⋆
வாய் வைத்த பிரானே ! ⋆
அன்னே ! உன்னை அறிந்து கொண்டேன் ⋆
உனக்கஞ்சுவன் அம்மம் தரவே ‖ **3.1.1** ‖

பொன் போல் மஞ்சனம் ஆட்டி அமுதூட்டிப் போனேன் ⋆
வருமளவிப்பால் ⋆
வன் பாரச் சகடம் இறச் சாடி ⋆
வடக்கில் அகம் புக்கிருந்து ⋆
மின் போல் நுண்ணிடையாள் ஒரு கன்னியை ⋆
வேற்றுருவம் செய்து வைத்த ⋆
அன்பா ! உன்னை அறிந்து கொண்டேன் ⋆
உனக்கஞ்சுவன் அம்மம் தரவே ‖ **3.1.2** ‖

கும்மாயத்தொடு வெண்ணெய் விழுங்கிக் ⋆
குடத் தயிர் சாய்த்துப் பருகி ⋆
பொய்ம் மாய மருதான அசுரரைப் ⋆
பொன்று வித்தின்று நீ வந்தாய் ⋆
இம் மாயம் வல்ல பிள்ளை நம்பீ ! ⋆

உன்னை என் மகனே என்பர் நின்றார் ⋆
அம்மா ! உன்னை அறிந்து கொண்டேன் ⋆
உனக்கஞ்சுவன் அம்மம் தரவே ‖ **3.1.3** ‖

மை ஆர் கண் மட ஆய்ச்சியர் மக்களை ⋆
மையன்மை செய்தவர் பின் போய் ⋆
கொய் ஆர் பூந்துகில் பற்றித் தனி நின்று ⋆
குற்றம் பல பல செய்தாய் ⋆
பொய்யா ! உன்னைப் புறம் பல பேசுவ ⋆
புத்தகத்துக்குள கேட்டேன் ⋆
ஐயா ! உன்னை அறிந்து கொண்டேன் ⋆
உனக்கஞ்சுவன் அம்மம் தரவே ‖ **3.1.4** ‖

முப்போதும் கடைந்தீண்டிய வெண்ணெயினோடு ⋆
தயிரும் விழுங்கி ⋆
கப்பால் ஆயர்கள் காவில் கொணர்ந்த ⋆
கலத்தொடு சாய்த்துப் பருகி ⋆
மெய்ப்பால் உண்டழு பிள்ளைகள் போல ⋆
நீ விம்மி விம்மி அழுகின்ற ⋆
அப்பா ! உன்னை அறிந்து கொண்டேன் ⋆
உனக்கஞ்சுவன் அம்மம் தரவே ‖ **3.1.5** ‖

கரும்பார் நீள் வயல் காய் கதிர்ச் செந்நெலைக் ⋆
கற்றா நிரை மண்டித் தின்ன ⋆
விரும்பாக் கன்றொன்று கொண்டு ⋆
விளங்கனி வீழ எறிந்த பிரானே ! ⋆
சுரும்பார் மெங்குழல் கன்னி ஒருத்திக்குச் ⋆
சூழ் வலை வைத்துத் திரியும் ⋆

அரம்பா ! உன்னை அறிந்து கொண்டேன் ⋆
உனக்கஞ்சுவன் அம்மம் தரவே ‖ **3.1.6** ‖

மருட்டார் மென் குழல் கொண்டு பொழில் புக்கு ⋆
வாய்வைத்தவ்வாயர் தம் பாடி ⋆
சுருட்டார் மென் குழல் கன்னியர் வந்துன்னைச் ⋆
சுற்றும் தொழ நின்ற சோதி ! ⋆
பொருட்டாயம் இலேன் எம்பெருமான் ! ⋆
உன்னைப் பெற்ற குற்றம் அல்லால் ⋆
மற்றிங்கரட்டா ! உன்னை அறிந்து கொண்டேன் ⋆
உனக்கஞ்சுவன் அம்மம் தரவே ‖ **3.1.7** ‖

வாளா வாகிலும் காணகில்லார் ⋆
பிறர் மக்களை மையன்மை செய்து ⋆
தோளால் இட்டவரோடு திளைத்து ⋆
நீ சொல்லப் படாதன செய்தாய் ⋆
கேளார் ஆயர் குலத்தவர் இப்பழி ⋆
கெட்டேன் ! வாழ்வில்லை ⋆
நந்தன் காளாய் ! உன்னை அறிந்து கொண்டேன் ⋆
உனக்கஞ்சுவன் அம்மம் தரவே ‖ **3.1.8** ‖

தாய்மார் மோர் விற்கப் போவர் ⋆
தகப்பன்மார் கற்றா நிரைப் பின்பு போவர் ⋆
நீ ஆய்ப்பாடி இளங்கன்னிமார்களை ⋆
நேர் படவே கொண்டு போதி ⋆
காய்வார்க்கென்றும் உகப்பனவே செய்து ⋆
கண்டார் கழறத் திரியும் ⋆

ஆயா ! உன்னை அறிந்து கொண்டேன் ⋆
உனக்கஞ்சுவன் அம்மம் தரவே ‖ **3.1.9** ‖

தொத்தார் பூங்குழல் கன்னி ஒருத்தியைச் ⋆
சோலைத் தடம் கொண்டு புக்கு ⋆
முத்தார் கொங்கை புணர்ந்திரா நாழிகை ⋆
மூவேழு சென்ற பின் வந்தாய் ⋆
ஒத்தார்க்கொத்தன பேசுவர் ⋆
உன்னை உரப்பவே நான் ஒன்றும் மாட்டேன் ⋆
அத்தா ! உன்னை அறிந்து கொண்டேன் ⋆
உனக்கஞ்சுவன் அம்மம் தரவே ‖ **3.1.10** ‖

‡ காரார் மேனி நிறத்தெம் பிரானைக் ⋆
கடி கமழ் பூங்குழல் ஆய்ச்சி ⋆
ஆரா இன்னமுதுண்ணத் தருவன் நான் ⋆
அம்மம் தாரேன் என்ற மாற்றம் ⋆
பாரார் தொல் புகழான் புதுவை மன்னன் ⋆
பட்டர்பிரான் சொன்ன பாடல் ⋆
ஏரார் இன்னிசை மாலை வல்லார் ⋆
இருடீகேசன் அடியாரே ‖ **3.1.11** ‖

அடிவரவு — தன்னேராயிரம் பொன் கும்மாயத்தோடு மையார் முப்போதும் கரும்பு மருட்டார் வாளா தாய்மார் தொத்தார் காரார் அஞ்சனம்

தன்னேராயிரம் முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்